Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300] of 1953.

விரோதி௵ (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது.

இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எச] யாழ்ப்பாணம்:- சுபகிருது௵ தை மீ கஉ உ வெள்ளிக்கிழமை (25 January. 1963) [இல-சஉ]

சைவ ஆசிரிய கலாசாலையைத்

திறந்து வைக்குக

சைவ உணவு சமைப்பதற்கு மாமிசக்கலங்களா!

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் அண்மையில் நடைபெற்ற நிர்வாகக்குழுக் கூட்டத்தில் சைவ ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கல்லூரிபற்றிக் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. கோப்பாய் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியை, சூழலையும் வசதிகளையும் ஒட்டி அதன் இப்போதைய கட்டிடத்திலேயே தொடர்ந்து நடாத்திவர வேண்டும் எனக் கல்வி மந்திரியைச் சபை கேட்டுக் கொள்ளும் முடிவுக்கு வருகிறது.

2. சைவ ஆசிரிய பயிற்சியாளருக்கு சமயவழிபாட்டிற்கும் தாவர உணவிற்கும் வசதிகள் அளிக்கப்படவேண்டுமென்று கல்வி மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் முடிவுக்கும் இச்சபை வருகிறது.

கொழும்புத்துறை ஆ. ப. கலாசாலையிற் பயிற்சி பெறும் சைவ ஆசிரியர்கள் கலாசாலைக்குள் சமய வழிபாடு நடாத்துவதில் பெரும் இடர்கள் அனுபவிப்பதாகவும், மாட்டிறைச்சி உணவுகள் பரிமாறும் பாத்திரங்களும் கரண்டிகளுமே மாமிசம் உண்ணாத சைவமாணவர்களுக்கு உணவு படைக்கவும் உபயோகிக்கப்படுவதாகவும் எமது சபைக்கு முறையீடுகள் கிடைத்துள்ளன. இத்தகைய விடயங்கள் சைவசமய ஒழுக்கத்துக்கு முற்றும் விரோதமானவை. இத்தகைய குறைபாடுகளை நீக்குவதற்கே மேற்படி கோரிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

3 கொழும்புத்துறையில் பயிற்சி பெறும் சைவாசிரியர்கள் மேலும் பல இடர்களைத் தாங்கிக் கொள்ள வேண்டி இருப்பதால் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையை மீண்டும் திறந்து வைக்கும்படியும் கல்வி மந்திரியைச் சபை கோருகின்றது.

சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு நினைவுவிழா

தை மீ 16உ (29-1-63) செவ்வாய்க்கிழமை மாலை6-00 மணிக்கு விவேகானந்தசபை மண்டபத்தில் தொடக்கி வைக்கப்படும்.

பூசையும் ஆராதனையும் நடைபெற்றதும்,

ஸ்ரீமத் சுவாமி பிரேமத்மானந்தாஜி அவர்கள் தலைமையில் திரு. V. A. சுகததாச, சேர். கந்தையாவைத்தியநாதன், திரு.V.A. கந்தையா, திரு C. B. மோடி, திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை ஆகியோர் உரை நிகழ்த்துவர். இவ்விழாவில் இன்னிசை விருந்தும் இடம்பெறும்.

நற்சிந்தனை

யவனர் சோனகர்
தமிழர்சிங் களவர்
எவரும் வணங்குவார்
எந்தைதன் தாளே,

மனித மனம்

எமது மனமென்னும் நீரோட்டம் நன்மையாகிய வழிக்கும் தீமையாகிய வழிக்கும் மத்தியில் ஓடுகிறது. எமது சோர்வில்லா முயற்சியால் நாம் அதை நல்வழியில் திருப்பவேண்டும் அவ்வாறு செலுத்தி விட்டால் அந்த வழியே சென்றுகொண்டிருக்கும். மனம் என்பது ஒரு சிறு குழந்தைக்குச் சமானம் அதைப் பலவந்தத்தினால் கட்டுப்படுத்த வேண்டும் மெதுவானதும் தொடர்ச்சியானதுமான அப்பியாசம் மனதை நல்வழிக்குத் திருப்பி விடும்.

- வசிட்டர்
(இராமாயணத்தில்.)

ஆருருவவுள்குவாருள்ளத்துள்ளே
யவ்வுருவாய்நிற்கின்றவருளுந்தோன்றும்
வாருருவப்பூண்முலைநன்மங்கைதன்னை
மகிழ்ந்தொருபால்வைத்துகந்தவடிவுதோன்றும்
நீருருவக்கடலிலங்கையரக்கர்கோனை
நெறுநெறென டர்த்திட்டநிலையுந்தோன்றும்
போருருவக்கூற்றுதைத்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே.

x x x

ஊனாகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானாதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
றானாகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானான்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

அன்பே உலகின் மேலான செல்வம்

"கண்ணப்ப நாயனார் சரித்திரத்திலிருந்து நாம் சிறந்த அன்பின் தன்மையை அறிந்துகொள்ளக் கூடியதாயிருக்கிறது. தூய்மையான அன்பினால் உலகில் சாதிக்கமுடியாத காரியம் ஒன்றுமேயில்லை" என பன்னாலை மயிலை ஞானவைரவ ஆலயத்தில் நடைபெறும் பெரிய புராணச் சொற்பொழிவுற் றொடரில் "கண்ணப்பநாயனார்" என்னும் விடயம்பற்றிப் பேசும் பொழுது ஆசிரியர் திரு. நா. ஆறுமுகம் குறிப்பிட்டார். மேலும் பேசும் போது அவர் கூறியதாவது "கண்ணப்பநாயனார் வேடுவகுலத்தைச் சேர்ந்தவராயினும் சிவபெருமானிடத்திற் கொண்ட பெரும் அன்பினால் ஆறு நாட்கள் சிவவழிபாட்டினால் முத்தியடைந்தார். நல்ல இறைச்சியைத் தெரிந்தெடுத்து அம்பினில் கோத்து நெருப்பினில் வாட்டி ருசிபார்த்து சிவபெருமானுக்குப்படைத்தார். அதை இறைவன் ஏற்றுக் கொண்டாரென்றால் கண்ணப்பன் இறைவன்மேல் கொண்ட அன்பையே அது காட்டுகிறது. இறைவன் கண்ணிலே இரத்தம் வந்தபொழுது தன் ஒரு கண்ணை அப்பிய நாயனார், இறைவன் மறு கண்ணிலே குருதி வடியவே

தொடர்ச்சி 4ம் பக்கம்

திருக்கோவையார்

[அணிமையில் நடைபெற்ற அ. இ. சைவ மகாநாட்டில் இரண்டாம் நாளன்று கலந்துகொண்ட வித்துவான், சைவப் புலவர், திரு. இ திருநாவுக்கரசு அவர்கள் ஆற்றிய உரை]

முற்றொடர்—4

'தாடலை போற் கூடியவை
தானிகழா வேற்றின்பக்
கூடலைநீ ஏகமெனக் கொள்"

என்றவாக்கியத்திற் கிணங்க குருந்தமர நீழலிலே ஞானாசிரியனாகி எழுந்தருளிய குருமூர்த்தியினோடு ஞானந்தானுருவாகிய நாயகனோடு - அன்று நான் கலந்திருந்து கண்ட சுகத்தைப் பிறரறிவாரல்லர்? "நானிவளாம் பகுதிப் பொற்பாரறிவார்?" அதுவுமன்றிக் "கண்படுப்போர் கைப் பொருள் போல்" குதிரை வாங்கக் கொண்டு சென்ற பொருளும் சேனையும், ஊர்தியும் தாமே கழன்றுபோன தன்மை - அச்சோலையிலே ஆய வெள்ளம் ஆயிரமாயிரமாகக் கூடியவை பிரிந்து சென்றன - அவைவிட்டகல வேட்டைக்குச் சென்ற திண்ணனாருக்குப் பின்னே தொடர்ந்து சென்ற பாச ஞான பசு ஞானங்களிரண்டாகிய நாணனும் காடனும்-திண்ணனார் திருக்காளத்திநாதரைக் கண்ணுற்ற காலத்திலே சிவஞானம் தலைகொண்டு பற்ற - அருக்கனொளிமுன் விளக்கொளிபோல விட்டு நீங்கினர். அத்தன்மைபோலவே குதிரை வாங்கவந்த அரசர் பிரதானிகள் — சுற்றம் மறைந்துபோக அத்திண்ணனார் காளத்தி நாதரைக் கட்டித்தழுவி மோந்து தன்னை மறந்த தன்நாமம் கெட்டுத் தலைவன் தாளிலே தலைப்பட்டுக் கண்ணப்பன் என்ற புதுப்பெயர்பெற்று நின்றார். அதுபோல - மாணிக்கவாசகர் என்ற திருநாமம் பெற்ற அன்றே தென்னவன் பிரமராயன் என்ற மந்திரத் தலைமைப் பெயர் (கண்படுப் போர் கைப் பொருள் போல) மறைய, கோவண உடை கொண்டு நின்றார்.

"அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடைமை
எல்லாமும்
குன்றே யனையாய்
யான் கொடுத்த போதே
கொண்டிலையோ
இன்னோ ரிடையூறு
எனக்குண்டோ எண்டோண்
முக்கணெம்மானே
நன்றே செய்வாய்
பிழை செய்வாய்
நானோ அதற்கு நாயகமே"

என அத்துவைதமாகக் கலந்து மகிழ்ந்தார். அதனைப் புறத்தே கண்டாருளரன்றி அவருள்ளக்கலப்பை அகத்தே கண்டாரிலர் - அதனை அவர் கண்டபடியே காண நாம் யார்? எம் உள்ளமார்? ஞானங்களார்? எம்மை யாரறிவார்?

இவ்வுண்மையை வலியுறுத்தவே புலியூர்ப் புனிதன் வெறியில் வெற்பில் - காற்பாவியவரை வாய் - கடி

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

உயர்மணி மாடங்கள் உடன் வருமாமோ!

"அளவையூர் - சஞ்சீவி"

இராகம்: சகானா :: தாளம்: ஆதி

பல்லவி

அங்கிங்கெ னாதபடி எங்கும் நிறைந்தருளி
ஆடும்ப ராசக்தியே — தயாபரி

அனுபல்லவி

பொங்கிவ ருமாசைப் புயலிற்பஞ் சானேன்
போஷிக்கும் தாயில்லாப் பொரித்தகுஞ் சானேன்

சரணம்

உடற்றுணை யென்றிருந்தோர் உயிர்த்துணை யாமோ
உயர்மணி மாடங்கள் உடன்வரு மாமோ
இடர்ப்படு மெண்ணங்கள் என்றைக்குப் போமோ
எண்விதி மாற்றுதல் உனக் கரிதாமோ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சுபகிருது ௵ தை ௴
௧௨ ௳ வெள்ளிக்கிழமை

கிராம சேவக சேவைக் கிளர்ச்சி

பழையன கழிந்து விட்டன, புதியன புகுந்து விட்டன; இனிக் கிராம பரிபாலனம் நனி சிறந்ததாக விளங்கும் என்று எண்ணியிருந்தவர்கள் ஏமாற்றம் அடையக்கூடிய விதமாகக் கிராம சேவக சேவை நியமனங்களைப் பற்றி நெருக்கடியை விளைவிக்கத்தக்க வகையிற் கண்டனங்கள் நாடெங்கும்செய்யப்பெறுகின்றன. பழைய சேவைக்கும் புதிய சேவைக்கும் உள்ள ஒரே ஒரு பெரிய வேறுபாடு என்னவெனில் முன்பு நியமனங்களைப்பற்றிப் பலமான கண்டனங்கள் இருக்கவில்லை. இப்பொழுது நியமனங்கள்பற்றி எங்குபார்த்தாலும் விபரீத விளக்கங்கள் கூறப்படுகின்றன.

மாணாக்கர்கள் தேர்வுகளிலே வினாத்தாள்கள் மாயமாக உரிய காலத்துக்கு முன் தேர்வுக்குரியவர்கள் கரங்களிலே சேர்ந்துவிடுகின்றன என்ற குற்றம் அடிக்கடி சாட்டப்பெறும் இக்காலத்தில் நியமனங்களைப்பற்றி நேர்மை நியாயம் நீதி என்பன காணமுடியுமா என்று கண்டனஞ் செய்வோர் சொல்வதற்கு மறுப்புச் சொல்வது சுலபமல்ல.

வழமைபோல இந்த நிலைமையில் ஒரு விசாரணை நிகழ்த்தப்படவேண்டியதத்தியாவசியம் என்பதற்கையமில்லை. நியமனஞ் செய்யப்பெற்றவர்கள் எல்லாரும் தகுதியற்றவர்கள் என்று கூற முடியாது. தகுதி யுரிமையில்லாதவர்களும் இருக்கின்றார்கள் என்பதுதான் குற்றம். எனவே நியமனம் பெற்றவர்களனை வரையும் கல்வி அதிபரும் உயர்ந்த அரசினர் சேவையில் உள்ளவர்கள் வேறிருவருமாக நேர்முகமாக ஆராயந்து திறமை வரிசையில் நூற்றுக்கறுபதின்மரைக் கிராம சேவையில் வைப்பது முறையாகும். எஞ்சிய இடங்களுக்குப் புதிய தேர்வு நடத்தி உரிய தகுதியுடையவர்களை எடுப்பது நெறியாகும்.

கிராம சேவைக்குரிய இலக்கணம் என்ன என்பதையும் விளக்கமாக வெளியிடுவதுநன்று. குறிக்கப்பட்ட அளவுக்குக் கல்வித் தேர்வு, மக்களுடன் அளவளாவிக் கிராம பரிபாலனஞ் செய்யும் ஆற்றலுடைமை; உடல் நலம் ஊக்கம், சமுகசேவை அநுபவம், நாட்டின் பெரியார்களின் நன்மதிப்புடைமை இவற்றுடன்குற்றஞ்செய்தவராக நீதிமன்றத்தில் தீர்ப்புக் கூறப்பட்டவராயில்லாத சான்றும் வேண்டும். இந்தவிதமான நற்குணம் நன்னெறி நன்மதி கற்ற நற்றிறமை நல்லநுபவம் உடையவர்களே ஊராருக்குற்ற உதவியாளராகவும் அரசினருக் கமைந்த அலுவலாளராகவும் திகழக்கூடியவர்கள். அத்தகைய முறையிற்கிராமசேவையை அமைத்தலே சாலச் சிறந்த தேசத் தொண்டாகும்.

"திருப்பாவையும் - திருவெம்பாவையும்"

—0—

[எமது திருத்துறைப்பூண்டி அபிமான நிருபர் திரு. வை. இரகுநாதன் B; Sc.]

திருத்துறைப்பூண்டி தாலுகா சைவ வைணவ ஆலயங்களின் சார்பில், திருத்துறைப்பூண்டி ஸ்ரீ பவ ஔஷதீஸ்வரசுவாமிஆலயத்தில் பாவைகள் மாநாடு 4-1-63 அன்று நடைபெற்றது எல்லாமாகப் பதினொரு கோயில் தேவத்தானங்கள் கூட்டுப்பொறுப்பு வகித்தன.

காலை ஏழு மணியளவில் திருமுறை திவ்விய பிரபந்தம் ஸ்ரீ ஆண்டாள், ஸ்ரீ மாணிக்கவாசகர் திருவுருவப் படங்கள்வீதிவலம்வந்தன மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் வந்தவுடன் கோவிலில் விசேட பூசை நடைபெற்றது.

மாநாடு இறைவணக்கத்துடன் ஒன்பதுமணிக்கு ஆரம்பமாகியது. காலை நிகழ்ச்சிகளுக்கு மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தலைமை வகித்தார்கள். துவக்க உரை தஞ்சை இந்து அறநிலைய துணை ஆணையர் திரு. சோமசுந்தர தேசிகர் அவர்களால் நிகழ்த்தப்பெற்றது. இம்மகா நாட்டிற்கு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள், ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் அவர்கள் ஆசிச்செய்தி அனுப்பியிருந்தார்கள். "கடவுள் ஒருவரே அழிவில்லாத ஆனந்த சுவரூபி. அவரிடத்தில் நாம் வைக்கும்அன்பே பேரின்பத்தை அளிக்கும் ... ... நாம் அடையும் ஆனந்தம் சிறிது காலம்தான் இருக்கின்றது ..... அழிவில்லாப் பேரானந்தத்தை அளிக்கும் அழிவில்லாப் பெருமான்களின் அருளைப்பெறப் பக்தர்களான மாணிக்கவாசகராலும் பாவை பாமாலை சூடிய கோதையான ஆண்டாளாலும் இயற்றப்பெற்ற பாவைகளைப் பாடி ஆனந்தம் அடைவோமாக"

அடுத்து மதுரை ஆதீன கர்த்தர் சொற்பெருக்காற்றினார்கள். "இற்றைக்குப் பதினொரு ஆண்டுகட்கு முன்னர் பாவை மகாநாடு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களால் தொடக்கி வைக்கப்பெற்று ஆண்டுதோறும், சைவ வைணவக் கோவில்களில் நடைபெற்று வருகின்றது. சைவம் வைணவம் இரண்டும் சமம் இரு சமயங்களின் ஒற்றுமைக்கு இப்பாவை மகாநாடுகள் வழி செய்கின்றன அரசாங்கத்தின் உதவிகொண்டு ஆணையர்கள் மூலம் ஒவ்வொரு இடங்களிலும் சிறப்பாக நடைபெறுகின்றன."

அவர் மேலும் கூறியதாவது, "சிவலிங்கத்தை வழிபட்டால் சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய மூவரையும் வழிபட்ட புண்ணியம்கிடைக்கும். சிவபிரானுடைய மூர்த்தங்கள் 25, விஷ்ணுவின் அவதாரங்கள் 10, பிரம்மா 1, ஆக 36 தத்துவங்களையும் வழிபட்ட பலன் கிடைக்கும்.

சிவலிங்கத்திலே, பூமிக்கதிபதியாகிய பிரம்ம பாகம் பூமிக்குள் மறைந்திருக்கும். இதற்கு நான்கு பக்கங்கள் உள்ளன மேலே ஆவுடையாரால் மறைக்கப்பட்டிருக்கும பாகம் விஷ்ணுபாகம். இது எட்டுபக்கங்களை உடையது. மேலே தெரிவது சிவபாகம். சிவனுடைய பாகம் நெருப்பு ஆகையால் அபிடேகம் இதற்கு நடைபெறும் இதுவே அபிடேக பாகம் எனவே சிவலிங்கத்தை வழிபடுவோர் எல்லாக் கடவுளரையும் வழிபட்ட பலன் பெறுவர்.

பெரிய உருத்திராட்சம் அணிந்தவர்களைப் பாம்பு தீண்டுவதில்லை. திருநீறுநெற்றியிலும் உடம்பிலும் அணிவது உடலைச் சுத்தமாக வைத்துக் கொள்வதற்கே, நெற்றியிலே திருநீறு அணிந்தால் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்யுமாம். எனவே தான் சிவனடியார்கள் இச்சைவ சின்னங்களை விரும்பி அணிகின்றனர்.

நிலம். நீர், காற்று நெருப்பு ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களால் ஆனதுதான் இவ்வுலகம். ஆகாயத்தை மட்டும் காண முடியாது. ஆகாயம் என்ற ஒன்று இருப்பதை நிரூபிக்க வானொலி உதவிபுரிகின்றது. ஒரு சிறு சப்தம் வினாடியில் 7 தடவை பூமியைச் சுற்றி வருவதாகக் கண்டு பிடித்திருக்கின்றார்கள். ஆகாயம்என்றபூதம் சொல்லை வாங்கி வழி இருந்தால் மீண்டும் அதைக் கொடுக்கும். எனவே ஆகாயம் ஒலி வடிவமாக உள்ளது. மணிவாசகப் பெருமானும் இதையே சொல்லி இருக்கின்றார். ஆகாயத்தில் தனித்த பொருள் ஒன்றும் கிடையாது. ஆகாயம் என்ற பூதம் இல்லாத பொருளும் கிடையாது இதைப்போற்தான் ஆண்டவனும் இறைவன் எல்லோரிடத்திலும் இருக்கின்றான். எல்லாவற்றையும் கடந்தும் நிற்கின்றான். எனவே ஆகாயமும் இறைவனும் எல்லாவற்றையும் ஊடுருவிநிற்கின்றன.

சோதி சொரூபமே இலிங்க சொரூபம் அதில் நின்று தோன்றியதே மற்றை உருவங்கள். இதையே கச்சியப்ப சுவாமிகளும் "அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ... ..." என்று பாடுகின்றார். இறைவனுக்கு அருவத் திருமேனி. அருவுருவத் திருமேனி, உருவத் திருமேனி எல்லாம் உண்டு "தோடுடைய செவியன்....." என்ற பாடல் உருவத்திருமேனியை விளக்கும் பாடலாகும்.

நாம் துன்பம் வந்தபோதுதான் கடவுளை நினைக்கின்றோம். பெண்கள்தான் நம் சமயத்தைக் காக்கின்றார்கள். நோன்புகள் நோற்று விரதம் இருந்து கோவில் செல்வது அவர்களிடத்தில் ஊறிய தொன்றாகிவிட்டது

சிவ என்பதில் சி என்பது சிவபிரானையும் வ என்பது சக்தியாகிய விஷ்ணுவையும் குறிக்கின்றது. இதைப் போலவே கௌரி சங்கர் என்பதிலும் கௌரி என்பது சக்தியாகிய விஷ்ணுவையும், சங்கர் என்பது சிவனையும் குறிக்கின்றது நான்கு வேதங்களும் இருபத்தெட்டு ஆகமங்களும் இருக்கின்றன. ஆகமம் என்பது இலக்கணம். கோவில்கள் எல்லாம் ஆகம இலக்கணமுறைப்படி அமைக்கப்பெற்றுள்ளன.

"உள்ளத்தாற் பொய்யா தொழுகின், உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்" என்பது காந்திக்குப் பொருந்தும், "தன் நெஞ்சு அறிவது பொய்யற்க ... ..." என்ற கொள்கையை அரிச்சந்திர நாடகம் பார்க்கையில்உணர்ந்தார், அன்றிலிருந்து அவர் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாகவே வாழ்ந்தார்.

கோவில்கள் ஏன்? அவற்றிற்கு ஏன் உதவி செய்ய வேண்டும் என்றெல்லாம் பொதுவுடைமைத் தொழர்களும் பிறரும்கேட்கின்றார்கள். அவர்கள் கொள்கை பகிர்ந்து வாழ்தலே. முற் காலத்திலே பகிர்ந்து வாழும் முறை சிறப்பாக நடைபெற்றது, நாம் கோயிலுக்குக் கொடுப்பதை இறைவன் எடுத்துக் கொள்கின்றாரா? இல்லவே இல்லை. கோவிலுக்குக்கொடுக்கும்பொழுது புகழ்நிலைக்கின்றது. இப் பிறப்பில் புகழும் மறு பிறப்பில் புண்ணியமும் கிடைக்கின்றன. நாம் கோவிலுக்குக் கொடுப்பது மீண்டும் பகிரப்பட்டு மக்களின் கைகளிடம் சேருகின்றன. இதை விடச் சிறந்த பகிர்ந்து வாழும் முறை கிடையாது".

மேலும் அவர் மரணத்தின் பின் மக்களின் நிலைபற்றித் தகுந்தசான்றுகளுடன் விளக்கினார். ஆவிகளுடன் பேசித் தொடர்பு வைக்க முடியும் என்பதையும் எடுத்துக்காட்டினார். இதுபற்றி மற்றச் சமயத்தின் சான்றுகளையும் எடுத்துச் சொன்னார். இது எல்லாம் அவர் எழுதிய "மரணத்தின் பின் மக்கள்நிலை"என்ற நூலில் விரிவாகவே விளக்கப்பட்டுள்ளன. இத்துடன் காலைநிகழ்ச்சிகள்முடிவடைந்தன.

மாலை நிகழ்ச்சிகள் நான்கு மணி அளவில் இறைவணக்கத்துடன் ஆரம்பமாயது. அப்பொழுது ஸ்ரீ வேதாரண்யேஸ்வரர் தேவஸ்தான தர்மகர்த்தா யாழ்ப்பாணம் வரணி ஆதீனம் திரு. செவ்வந்திநாத பண்டார சந்நிதிகள் அவர்கள் தலைமை தாங்கி தலைமை உரை நிகழ்த்தினார்கள்.

அடுத்து அம்பாசமுத்திரம் திரு. கிருஷ்ணன் அவர்கள் 'திருஎம்பாவை-திருப்பாவை என்னும் தலைப்பில் சொற்பொழிவு செய்தார். "அடியவர்கள் எல்லோரும் பக்தி மார்க்கத்தில் நின்று இறைவனடி சேர்ந்தவர்கள். வேதங்களின் சாரங்களே 'பாவை'கள். சிவபிரான் அசைந்து பொன்னம்பலத்தில் ஆடுகின்றார். பெருமாள் அசைவின்றிப் பாற்கடலில் பாம்பணையில் படுத்திருக்கின்றார். இருவரையும் துதித்துப் பாடியவைகளே 'பாவைப்' பாடல்கள்.

திருப்பாவையில் முதல் ஐந்து பாடல்கள் இறைவனுடைய பாசுரங்களைப்பற்றிக் கூறுகின்றன. ஆறுதொடக்கம் பதினைந்து பாடல்கள் வரை தூங்குபவர்களைத் துயில் எழுப்புதல்போல் உள்ளன. அதாவது அண்டாள் பத்துஆழ்வார்களையும் துயில் எழுப்புவதாக ஒரு சாரார் கொள்கின்றனர்.

திருஎம்பாவையில் முதல் ஒன்பது பாடல்களும் துயில்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

நல்லைக்கீர்த்தனம் — 29.

நம்பினேன் வேலனே!

*

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம் : நாட்டைக்குறிஞ்சி : தாளம் : ஆதி

பல்லவி

தும்பிமுகவனது தம்பியே — உன்னை
நம்பினேன் வேலனே அம்பிகை பாலனே

அனுபல்லவி

கும்பிடும் அடியவர் குறைகள கற்றும்குஹா
வெம்பிடும் என்வினையை வேரறுப்பாய் முருகா

சரணம்

அருள்முகம் மூவிரண்டும் அநவரதம் நினைந்து
உருகிஉருகி நின்றேன் உள்ளம் மிகக்கனிந்து
வருவாய் முருகையனே வன்னமயி லமர்ந்து
திருவாழும் நல்லையிலே திகழும் சிவக்கொழுந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பாவையும் ....

2-ம் பக்கத் தொடர்ச்சி

எழுப்பும்பாடல்கள். ஒன்பது சக்திகளை எழுப்புவதாக ஒரு சாரார் கொள்கின்றனர். எனவே திருப்பாவை, திருஎம்பாவை இரண்டும் ஒரே பலன்களைத்தான் கூறுகின்றன. திருப்பாவையில் 29ம் பாடலும், திருஎம்பாவையில் 19ம் பாடலும் பாடியவர்களின் கொள்கைகளை விளக்குகின்றன. இதற்கு முந்திய பாடல்களில் இறைவன் புகழ் பாடிவிட்டு இப் பாடலில் அதற்குரிய பலனை யாசிக்கின்றார்கள். இவ்வாறு சொற்சுவை பொருட்சுவையுடன், பக்திச் சுவையும் செறிந்த பாடல்களே பாவைப் பாடல்கள். அவைகளைப் படித்து இன்புறுவோமாக".

அடுத்ததாக, திருச்சி அர்ச்சூசையப்பர் கல்லூரித் தமிழாசிரியர் திரு. ஐயன்பெருமாள்கோனார் அவர்கள் 'திருப்பாவை" என்ற தலைப்பில் சொற்பெருக்காற்றினார்கள். அதுபோழ்து அவர் கூறியதாவது, "தமிழகத்தில் 12 வருடங்களின் முன்னர் மழை இல்லாமல் பஞ்சம் வந்தது. மக்கள் பட்டினியால் வாடினர் சமயப்பற்று சிறிது குன்றிய காலம் அது. இதைக் கண்ட ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் சைவமும், வைணவமும், ஒற்றுமையாகச் சமயப் பற்றை வளர்த்தற்பொருட்டு 'பாவை' மாநாடுகளைத் தொடக்கி வைத்தார். "முன்னிக் கடலைச் சுருக்கி.........." "ஆழிமழைக் கண்ணா......" என்ற பாடல்கள் மழைக்குத் துதிப்பாடல்கள். இரண்டாவது ஆண்டில் மழைபெய்தற்கு அறிகுறியாக மழை புயலாக வீசிற்று. பின்னர் மக்கள் வாழ்வு வளம்பெறலாயிற்று.

இம்மாதம் சைவர்களுக்கு சைவமாதமாகவும், வைணவர்களுக்கு வைணவ மாதமாகவும் கொள்ளப்படுகின்றது. இம்மாதத்தில் நடேசர்விழா, ஸ்ரீரெங்கநாதர்விழா முதலியன நடைபெறுகின்றன. இம் மாதத்தை இங்குள்ள தாய்மார்கள் முகபசுளித்து 'பீடை மாதம் என்றும் சூன்யமாதம் என்றும் சொல்வார்கள். பீடைமாதம் என்பது, பீடு மாதம் என்பதின் திரிபு. பீடு தமிழ்ச்சொல். அதன்பொருள் பெருமை சூன்ய மாதம் என்றால் ஒன்றுமில்லாத வெறுமையான மாதம் என்று பொருள் கொள்வர். அப்படியல்ல அது. தூய்மையான, வெறுமையான மனத்துடன் காலையில் இறைவனை வழிபடும் மாதம் இதுவாகையால் அப்பெயர் பெற்றது. "மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்நாளால் ... ." என்பதில் மார்கழி மாதச் சிறப்புப் புலப்படுகின்றது.

"புறந்தூய்மைநீரான் அமையும்......" என்ற வள்ளுவர் வாக்குப்படியே ஆண்டாள், 'மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்நாளால் நீராடப்போதுவீர் போதுமினோ நேரிழையீர்......" என்றும், மணிவாசகர், "......போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோ ரெம்பாவாய்" என்றும் பாடியுள்ளார்கள். பாவைகளின் அடிப்படைக் கருத்து, இறைவனுடைய திருவருளாகிய நீரிலே ஆன்மாவைக் குளிப்பாட்டித் தூய்மைப்படுத்துதல் என்பதாம். ஆன்மாவை இருள்மறைத்து நிற்கின்றது அதைப் போக்கித் தூய்மைப் படுத்துவதே பாவைகளின் குறிக்கோள்.

பாவை நோன்பு கன்னிப் பெண்களால் நோற்கப்படும் விரதமாகும். இப்பொழுதும் இது பல விதமாக நாட்டிலே நிலவுகின்றது. மலையாளநாட்டில் கன்னிப் பெண்கள் நோன்பிருக்க, தாய்மார்கள் அநுசரணையாக அவர்களுக்கு உதவி செய்வார்கள், பாவை நோன்பில் சுயப்பிரயோசனமும் நாட்டுநன்மையுமே முக்கிய குறிக்கோள். சுயப்பிரயோசனமாவது தங்களுக்கு நல்லகடவுள்பக்தியுள்ள நாயகர் கிடைக்க வேண்டுதல். நாட்டு நன்மையாவது தீங்கின்றி நாடுசெழிக்கவும் திங்கள் மும்மாரி பெய்யவும் பசுக்கள் பால் சொரியவும் முதலிய இன்னோரன்ன பலவும் கிடைக்க வேண்டுதல்.

ஆண்டாளின் நோன்பை 30 பாடல்களில் காணலாம், நோன்பு மறைந்துவிட்டது. ஆனால் பாடல்கள் இருக்கின்றன. ஆண்டாள் கண்ணனையே கணவனாகக் கருதி வாழ்ந்தவள். கண்ணன் முன்பு கோகுலத்தில் கோபியர்களுடன் ஆடியதை அறிந்தாள். எனவே கண்ணனை அடைதற்குத் தன்னையும் தோழியர்களையும் கோபியர்களாகவும், இடத்தை கோகுலமாகவும் பாவித்து, பாவை நோன்பு நோற்றாள். இடையர்குல மகளிராக மாறின ஆண்டாளுக்கு, இடை நடை, இடைப் பேச்சு, இடைமுடை, இடை நாற்றம் எல்லாம் வந்துவிட்டன.

இடை நடை - பல பாற்குடங்களை ஒன்றன்மேல் ஒன்று அடுக்கி கைவிட்ட நிலையில் நடந்து செல்வது.

இடைப்பேச்சு - நெய்யுண்ணோம், பாலுண்ணோம், முடை நாற்றம் - பால், தயிர், வெண்ணை சேலையில் துடைத்த நாற்றம்.

இடை முடை - பால் தயிர், வெண்ணை முதலியன வைத்திருத்தல்.

இப்படியாக மானசீக நிலையில் மாறிய ஆண்டாள் நோன்பு நோற்றாள்.

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி......" என்ற பாடலில் பேர் என்ற சொல்லுக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதுவே மாநாட்டின் அடிப்படையும் கூட. இறைவன் கட்டிப் பொன், ஐயர் தான் பூட்டி வைப்பவர். பணிப் பொன்தான் அவருடைய பெயர், எனவே அவர் பெயரைத்தான் நாம் சொல்லி வணங்குகின்றோம். முன்பெல்லாம் இறைவன் வசிக்கும் இடங்களின் பெயரையோ, அல்லது இறைவனின் திருநாமங்களையோ தந்தைமார் தம் பிள்ளைகட்கு வைத்தனர். அதனால் பிள்ளைகளின் பெயர் சொல்லி அழைப்பதன்மூலம், இறைவனையும் நினைவுகூர்ந்து அவர்கள் வணங்கினார்கள். இப்பொழுதுதான் நாகரீகப் பெயர்கள் வந்து, அதுதான் இல்லை என்றாகிவிட்டதே,

சமயப்பக்திகுன்றுவதற்குக் காரணம் இவையே இதனால் திங்கள் மும்மாரி பெய்யாமல் பொய்த்து விடுகின்றது. சமயப்பற்றிலே நின்ற ஆண்டாளும், மணிவாசகரும் ஈற்றில் இறைவனுடன் இரண்டறக் கலந்தார்கள்.

திருப்பாவையின் 30-ம் பாடல் பட்டர் அனுபவித்த கருத்தைத் தெரிவிக்கின்றது. 'கன்றை இழந்த பசு தோற்கன்றுக்கும் பால் சுரக்குமாபோல், தோல் கன்றுகளாகிய எங்களுக்கும் பசுவாகிய பரமசிவன் கருணையாகிய திருவருளைச் சுரப்பான்." என்ற வேண்டுதலுடன், சொற்பொழிவு நிறைவுற்றது

அடுத்து "திருப்பாவை" - "திருஎம்பாவை" பாடிய மாணவ மாணவியர்களுக்குப் பரிசில் வழங்குதல் நடைபெற்றது

இதன்பின்னர், காந்தி கிராமம் திரு. ரெங்கராசன் அவர்கள் "ஏழை பங்காளன்" என்னும் தலைப்பில் ஓர் சொற்பொழிவு ஆற்றினார்கள். அதில் இறைவன் "அடியார்க்கு எளியவன்" என்னும் கருத்தை வலியுறுத்தினர்.

கடைசியாகத் தலைவர் முடிவுரையுடன் மாலைச் சொற்பொழிவு நிகழ்ச்சிகள் முடிவடைந்தன. அடுத்து நன்றி நவிலல் நடைபெற்றது

கலா நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றன. ஒரு வழக்கறிஞர் தலைமைதாங்கினார். அதுபோழ்து கன்னுகுடி வெங்கட்டராம பாகவதர் அவர்கள் "மாணிக்கவாசகர் வரலாறு" பற்றிக் கதா காலக்ஷேபம் சிறப்பாக நிகழ்த்தினார்கள்.

அதன் பின்னர் சென்னை முன்னாள் மந்திரி திரு. குமாரசுவாமிராஜா அவர்களின் பேத்தி பேபி பிரபாவதி அவர்களின் திருப்பாவை - திருஎம்பாவை இசை நடன நிகழ்ச்சி நடைபெற்றது. அலங்கரிக்கப்பெற்ற மின்சார மேடையில் ஆண்டாளாக வந்து சிறப்பாகத் திருப்பாவைக்கு அபிநயம் பிடித்தார். உணர்ச்சிகள் ததும்ப, முகபாவனைகளுடன் வெகு சிறப்பாக அவருடைய நடன நிகழ்ச்சி நிகழ்ந்தது.

தலைவர் பாராட்டுரையுடன் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன, மாநாடும் இனிது நிறைவெய்தியது.

இவ்வாரம் தை 27-1-63 — 2-2-63

உங்கள் பலன்?

[ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

இனத்தவருடன் மோதல் தொடர்ந்து நடைபெறும். வாகன மூலமான தொல்லைகளும் சிறு விபத்துக்களும் உண்டாம். பணமளவில் ஓரளவு நல்லவாரம்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

நிலபுலங்களால் இலாபம் உண்டாம். புதிய முயற்சிகள் தடங்கல்படும். ஆனால் வெற்றி பெறும். குடும்ப நிலைமைகள் புதனுக்குப் பின் திருந்தவேண்டும்.

மிதுனராசி மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

மன அமைதி இருக்காது. சில கண்டனங்களும் மேலும் பல பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டியும் வரும். பணமளவில் நல்ல வாரம்,

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

குடும்ப நிலைமை குழம்பலாக இருக்கும் புதிய முயற்சிகள் தடங்கல்படும். உடல் நிலையும் பாதிக்கப்படும் சில காலத்திற்கு எதுவிதபுது முயற்சியும் தொடங்க வேண்டாம். ஞாயிறு திங்கள் எச்சரிக்கையோடுகழிக்கப்படவேண்டும்.

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

முதலிருநாட்களும் புதியமுயற்சிகளுக்கு ஏற்றவை. செவ்வாய் புதன் வியாழன் காலை எச்சரிகையோடு கழிக்கப்படவேண்டும். வாரமிகுதி நாட்கள் சாதகமாக மாறும்,

கன்னிராசி உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

உடல்நிலை பாதிக்கப்படும் மனநிம்மதி இருக்காது. வயிற்றுக் கோளாறுகளுக்கு இடமுண்டு. வியாழன் வெள்ளி சனி காலை எச்சரிகையோடு கழிக்கப்பட வேண்டும். பணமளவில் நல்ல வாரம்,

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

பணமளவில் நல்ல வாரம். புது முயற்சிகள் வெற்றிபெறும். நிலபுலங்களால் இலாபம் நிச்சயம். ஆனால் கடைசி நாளை எச்சரிக்கையோடு கழிக்கவும்.

விருட்சிகராசி விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

விவசாய ஈடுபாடுகளில் வெற்றி நிச்சயம். அந்நியரும் அயலவரும் மிக உதவுவர். ஆனால் தந்தைவழி உறவினருடன் சச்சரவுக்கு இடமுண்டு.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

அடைவு நகை
ஏல விற்பனவு விளம்பரம்

—0—

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு, 415/A காங்கேசன்துறை வீதி க. நடராசா அவர்களின் அடைவு கடையில் 31-12-61 ந் திகதிக்கு முன் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 1963-ம் ஹூ பெப்ரவரி 20 உ (20 - 2 - 63) புதன்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
Court Commissioner,
Auctioneer & Valuer, 23–1–63,
643 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
M 245 25, 1–2–63.

கோட்டு விற்பனவு விளம்பரம்

கைதடி, தற்போது வவுனியா
தாமோதரம்பிள்ளை
பொன்னம்பலம்
—வழக்காளி.

இல. M.B. 4542.

எதிராக

கைதடி
1. சங்கரப்பிள்ளை மாணிக்கம்
2. பெண் நாகம்மா.
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M.B. 4542-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகள் 1963-ம் ஆண்டு பெப்ரவரி (மாசி மாதம் 23-ம் திகதி (23-2-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 3049-ம், இதில் ரூபாய் 2130-க்கு 22-1-62 திகதி தொடக்கம் 3 - 8 - 62 திகதி வரைக்கும் 100-க்கு 7 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 224-85 சதம்.

காணிகளின் விபரம்:

1, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக தென்மராட்சிப் பகுதி நாவற்குளிக்கோவிற்பற்று கைதடியிறை 'மூத்தவதனை புலம் தோட்டம்" நிலப்பரப்பு 17¾-ம், செய்பயிர்களும்- எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு நவரத்தினம் மகள் பரமேஸ்வரியின் ஆதனம். மேற்கு விசயரத்தினம் பெண் சிவபாக்கியத்தின் ஆதனம் தெற்கு செல்லத்துரை செல்வரத்தினத்தின் ஆதனம். இதில் சொரியலாய் எட்டில் ஏழு பங்கும் (7/8)-ம். இக்காணிககு தென் மேற்கேயிருக்கும் கிணற்றில் பங்கும் வழமையான வழிவாய்க்காலும். முற்பதிவு F 235/60.

2, மேற்படி கைதடியிறை 'மூத்தயவத்தைபுலம்" நிலப்பரப்பு பத்து (10-ம்). எல்லை கிழக்கு தம்பிப்பிள்ளை செல்லத்துரையின் ஆதனம். வடக்கு காசிப்பிள்ளை இராசரத்தினத்தின் ஆதனம். மேற்கு ரோட்டு தெற்கு சின்னையா சேனாதிராசாவின் ஆதனம். இதில் சொரியலாய் நிலப்பரப்பு முக்கால் நீக்கி மிகுதியில் சொரியலாய் நாலில் ஒரு பங்கு (¼-ம்) கிணற்றுப்பங்கு, F 267/114.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer,
& Licenced Auctioneer.
தெல்லிப்பழை, 8-12-1962.
M. 244 25-1-63.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் சிவியாதெரு
கந்தையா கனகரத்தினம்
—வழக்காளி.

இல, M.B. 3802,

எதிராக

யாழ்ப்பாணம் சிவியாதெரு
பொன்னையா கேசவநாதன்
தானுகவும் காலம் சென்ற தனது
பெண் செல்லம்மாவின் ஆஸ்திக்கு பிரதி காரியஸ்தராகவும்
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டில் M.B. 3802-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1963-ம் ஆண்டு பெப்ரவரி (மாசி) மாதம் 18-ம் திகதி (18-2-63) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 1115-ம், இதில் ரூபாய் 700-க்கு 20-12-60திகதி தொடக்கம் 30-3-61 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம்முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 227-37 சதம், இதில் ரூபா 500/- இறுபட்டது.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி கண்டிக்குளிக் கோவிற்பற்று சிவியாதெருவிறை "கற்புலத்து வளவு" நிலப்பரப்பு இரண்டு (2-ம்) வீடும் செய்பயிர் வான் பயிர்களும், வடக்கெல்லைக் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும், கிழக்கே கை ஒழுங்கையூடாக வழி வாய்க்காலும். எல்லை கிழக்கு கை ஒழுங்கை. வடக்கு கந்தையா பெண் மாணிக்கத்தின் ஆதனம். மேற்கு மயிலு பெண் அன்னத்தின் ஆதனம். தெற்கு சதாசிவம் பெண் இராசம்மாவின் ஆதனம். இதடங்கலும்,

முற்பதிவு D 208/82,

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer &
Licensed Auctioneer.
தெல்லிப்பழை, 22-12-1962.
M 243 55-1-63.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

— ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிதி வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலிலும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை

என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை

சிறுப்பர்.

Std. 1.

திருக்கோவையார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தோட்ட காவகத்தே என உரைத்தார். கடிதோட்ட களவு காவலை வாங்கிய களவென நச்சினார்க்கினியர் பெயருரைத்தார். கடிதோட்ட களவென்றுமாம். அதன் பொருள் கந்தர்வ மணத்திற்கு மூலமாகிய களவுப் புணர்ச்சியில் என்பது. சிறை காவலை நீங்கி ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத் - தன்முதல் குருவுமாய்த் தவத்தினி னுணர்த்தவிட்டு அந்திய மின்மையில் அரன்கழல் செலுமே-என்ற சிவஞான போத வாக்கிற்கிணங்கி - குருவடிவாய் வந்த ஞான சாரியனைக் கண்டமாத்திரத்தே கைப்பொருள் நீங்கியவாறு காவலை வாங்கிய உள்ளங்கவர் களவகத்தே ... காண்பார் பிறரில்லாராக அந்தமொன்றில்லாத பேரானந்தம் பெற்றமை தலைமகன் கூற்றின்மேல் வைத்து தோழியர் குழாம் நீங்கவே சிறை காவல் தீர்ந்து போக - நாணம், மடம், அச்சம், பயிர்ப்பாகிய பெண்மைக் குணம் சாய வேட்கை மீதூர்தலினாலே, நிறை காவலும் தீர்ந்துபோக "தானே அவளே தமியர் காணக் காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்" என்ற இறையனார் வாக்குக் கிணங்க - அத்துவைத இன்பம் போல இருவயினும் ஒத்தார். இதனைக் கலவி உரைத்தல் என்ற துறையிலே வைத்துக் கூறினார். நெருப்பும் சூடும் எப்படிப் பிரிக்க முடியாதோ அத்தன்மை போலவே,

"அவனே தானே
ஆகிய அந்நெறி
ஏகனுகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு
வல்வினை இன்றே..."

என்ற சிவஞானபோத சூத்திரத்தக்கிணங்க மணிவாசகர் குருந்தமர நீழலில் இறைவனோடு ஏகனுகி இறைபணி நின்ற தன்மையை "நான் இவளாம் பகுதிப் பொற்பாரறிவார்" என்ற தொடரில் வைத்து மொழிந்தார்.

—தொடரும்.

கோட்டு விற்பனவு

விளம்பரம்

கொக்குவில் கிழக்கு
பொன்னையா முருகேசு
—வழக்காளி.

இல. M.B. 3566.

எதிராக:

தண்ணீரூற்று
கணபதிப்பிள்ளை தங்கராசா
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M.B. 3566-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1963-ம்ஆண்டு மார்ச்சு (பங்குனி) மாதம் 2-ம் திகதி (2-3-63) சனிக்கிழமை முற்பகல் 10½ மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3750-ம், இதில் ரூபாய் 2500-க்கு 22-8-60திகதி தொடக்கம் 10-7-61 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 212-02 சதம்

காணியின் விபரம்:

வடமாகாணம் வவுனியா டிஸ்திறிக் கடற்கரைப்பற்று மூல்லைத்தீவுப்பகுதி தண்ணீரூற்றிலை "ஆலடியில் வளவு" எல்லே வடக்கு சரவணமுத்துவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடகிழக்கு வினுயர் பொன்னம்பலத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். கிழக்கு முடிக்குரிய காணி. தென்கிழக்கு றோட்டு. தெற்கு றோட்டு. மேற்கு ஏ. சின்னப்பு கைம்பெண் இரத்தினத்திற்கும் மறுபேருக்கு முரிய ஆதனம். இதன் விசாலம் வடக்கு 25 யார். கிழக்கு 35 யார். தெற்கு 25 யார் மேற்கு 40 யார். இதற்குட்பட்ட கட்டிடங்களும் சேர்ந்த முழுவதும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Valuer,
Licensed Auctioneer
தெல்லிப்பழை, 22-12-1962.
M. 242 25-1-63

கருத்துக் கலசம்

நாடாயிருந்தால் என்ன?
காடாயிருந்தால் என்ன?
மேடாயிருந்தால் என்ன?
பள்ளமாயிருந்தால் என்ன?
எங்கு உன்மேல் நடக்கும் மனிதர்கள் நல்லவர்களாக இருக்கின்றார்களோ அங்கு நீயும் நன்றாக வாழ்கிறாய் மண்ணே.

—'ஔவைப்பிராட்டி'.

X X X

இது இப்படித்தான் நடக்கும் - இப்படித்தான் நடக்க முடியும் - என்று எந்த முயற்சியும் நீ ஆசைப்படுகிறபடியே முடியவேண்டும் என்பதாக செயலை மறந்து விளைவை மட்டும் எண்ணிக் கற்பனை களை வளர்க்காதே; அது வேறு விதமாக நடந்தாலும் தாங்கிக் கொள்ளத் தாயாராயிரு "கீழே விழுவது மீண்டும் எழுவதற்காகவே,"

X X X

பிறருடைய பணத்தைத் திருடினால் அதை நீ உன்னுடையதைப்போல் வைத்துக் கொண்டு செலவு செய்ய முடியும். அவற்றைச் செலவு செய்து நீ ஒரு பயனும் பெற முடியாது. வயிற்றுக்கு இல்லாமல் ஏழையாகிவிடலாம்; ஆனால் பண்பினால் ஏழையாகி விடக்கூடாது.

X X X

ஒத்தப்போவதும் மற்றவர் களைத் தேவைக்கு அதிகமாக மன்னிப்பதும், பிறருடைய பலவீனங்களுக்கு அநுசரணையாக நம்முடைய பலங்களையும் திறமைகளையும் ஒடுக்கிக் கொள்வதும் சமூகத்தில் ஒரே விதமான மனிதர்கள் தொடர்ந்து செழிப்பாய் வாழவும் கொடுத்துத் திரியவும் துணை செய்யுமே அல்லாமல் எல்லோருடைய நன்மைகளையும் பாராட்டுவதற்குத் துணை செய்யாது.

X X X

ஏதாவது ஒன்றில் அளவு மீறி ஆசைப்படுகிற எல்லாரும் அந்த ஒன்றைத்தவிர மற்றவற்றில் உள்ள சாத்திய அசாத்தியங்களைச் சிந்திக்க மறந்துவிடுகிறார்கள். அதற்காகச் சில சமயங்களில் அவர்களை நாம் மன்னிக்கவும் வேண்டியிருக்கிறது.

X X X

கல்வி வெறும் மலர்போன்றது, விலையும் பணிவும் தான் அதை மணக்கச் செய்கின்றன.

—மணிவண்ணன்.

இவ்வாரம் உங்கள்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

அலுவலகத்தில் சச்சரவு ஏற்படும். உடல் நிலை தொடர்ந்து பாதிக்கப்பட்டிருக்கும். உமது நண்பர்களை நீர் அவர்களிடம் வைத்திருக்கும் நம்பிக்கைக்குத் துரோகம் செய்யக்கூடும். சிறு விபத்துகள்பற்றி எச்சரிக்கையாக இருக்கவும்.

மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

சொந்த விவகாரங்கள் குழம்பலாக இருக்கும். உமது எண்ணப்படி உமது அலுவல்களில் நடந்து கொள்வது கடினமாயிருக்கும். குடும்பத் தொல்லைகளும் வரலாம். பணமளவில் நல்ல வாரம். பழைய முதலீடுகள் நல்ல வினை வைத்தரும்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

எதிரிகளுக்கு இன்னல் நிச்சயம். நிலபுலங்களால் இலாபமும் புகழும் உண்டாம். நண்பர்கள் மிக உதவிபுரிவர். ஆனால் சிறு உடல் நிலைக் குழப்பங்கள் உண்டாம்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

வயிற்றுக் கோளாறுகளுக்கு இடமுண்டு. மன நிம்மதி இருக்காது பணமளவில் நல்ல வாரம். பழைய முதலீடுகள் நல்ல வினை வைத்தரும்.

திருவதிகை - மனவாசகங்கடந்தார்
அருளிச் செய்த

உண்மை விளக்கம்

மூலமும் உரையும்

[சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் இ செல்லத்துரை]

(முற்றொடர் - 5)

I. ஆருறு தத்துவம்:

ஐம்பொறிகளின் புலன்களும்
அவை பஞ்சபூதங்களில் தொடர்புறுமாறும்

வானிடமா நின்றசெவி மன்னும் ஒலியதனை
ஈனமிகுந் தோல்கால் இடமாக — ஊனப்
பரிசந் தனையறியும் பார்வையிற்கண் அங்கி
விரவியுரு வங்காணு மே. 12.

கொ—கூ: செவி வான் இடமா(க) நின்று மன்னும் ஒலி அதனை அறியும்; ஈனம் மிகும் தோல் கால் இடமா(க) (நின்று) ஊனப்பரிசம்தனை அறியும்; பார்வையில் கண் அங்கி விரவி (நின்று) உருவம் காணும் (+ஏ).

ப—ரை: செவி வான் இடமா(க) நின்று மன்னும் ஒலி அதனை அறியும் - செவியானது ஆகாயத்தைப்பொருந்தி நின்று விளங்குகின்ற சத்தத்தை அறியும்; ஈனம் மிகும் தோல் கால் இடமா(க) (நின்று) ஊனப்பரிசம் தனை அறியும் - இழிந்த தன்மையை அதிகமாகவுடைய தோலானது காற்றைப் பொருந்தி நின்று குறைவுபாடுடைய பரிசத்தை அறியும்; பார்வையில் கண் அங்கி விரவி (நின்று) உருவம் காணும் (+ஏ) - பார்க்கும் சத்தியுடையதாகிய கண் (நெருப்பின்) ஒளியைப்பொருந்தி உருவத்தை அறியும்.

பொழிப்பு: செவி ஆகாயத்தின் தொடர்பால் சத்தத்தையும், தோல் காற்றின் தொடர்பால் பரிசத்தையும், கண் ஒளியின் தொடர்பால் உருவத்தையும் அறியும்.

இதுவுமது

நன்றாக நீரிடமா நாவிரதந் தானறியும்
பொன்று மணம்மூக்குப் பூவிடமா — நின்றறியும்
என்றேது மன்றே யிறையா கமமிதனை
வென்றார்சென் றூரின்ப வீடு. 13.

கொ—கூ: நா (தான்) நீர் இடமா(க) நின்று இரதம் நன்றாக அறியும்; மூக்கு பூ இடமா(க) நின்று பொன்று மணம் அறியும்; என்று இறை ஆகமம் அன்றே ஓதும்; இதனை வென்றார் இன்ப வீடு சென்றார்.

ப—ரை: நா (தான்) நீர் இடமா(க) நின்று இரதம் நன்றாக அறியும் — நாக்கு நீரைப் பொருந்தி நின்று இரத்தத்தை நன்கு அறியும்; மூக்கு பூ இடமா(க) நின்று பொன்று மணம் அறியும் — மூக்கு நிலத்தைப் பொருந்தி நின்று கெடாத கந்தத்தை அறியும்; என்று இறை ஆகமம் அன்றே ஓதும் — என்று இவ்வாறு சிவாகமங்கள் அநாதியே உரைக்கும்; இதனை வென்றார் இன்பவீடு சென்றார் — இப்பஞ்சப்புலன்களின்வழிச் செல்லாமல் அவற்றை வென்று நின்றவர்கள் பேரானந்தப் பேறுதவும் முத்தியைப் பெற்றோவர்.

["புலன் அடக்கித் தம் மூதற்கண் புக்குறுவார் போதார், தலம் நடக்கும் ஆமைதக" என்னும் திருவருட்பயனுரியர் கூற்றும், "உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான், வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து." என்னும் வள்ளுவர் வாய்மொழியும் ஈண்டுப் பொருந்தி உணரத்தக்கன. புலன் வென்றார் தப்பாமலே வீட்டின்பந் துய்ப்பார் என்னுந் தெளிவுபற்றிவந்த துணிவுகாட்ட 'சென்றார்' என இறந்த காலத்தாற் கூறினர். —('மலர்மிசை ஏகினன்' என் புழிப்போல.)]

பொழிப்பு: நாக்கு நீரின் தொடர்பால் இரத்தத்தையும், மூக்கு நிலத்தின் தொடர்பால் கந்தத்தையும் அறியும். இவ்வைப்புலன்களையும் வென்றவர்கள் பேரின்பமடைவர்.

—தொடரும்

சுவாமி விவேகானந்தரின் 100-வது ஆண்டு ஆராதனை விழா

சுவாமி விவேகானந்தர் அவர்களின் 100-வது ஆண்டு நிறைவு ஆராதனை விழா, சென்ற 17-ந்திகதி (17-1-63) வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் திருமலை இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

அன்னை உலகின்

1-ம் பகுதித் தொடர்ச்சி

தமது மறு கண்ணையும் இழக்கத்தணிந்தார் இச் சமயத்திலே அவர் இறைவனுல் ஆட்கொள்ளப்பட்டார்."

இவ்விழாவிற்கு சேர். கனகசபைவித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. கா. கதிர்காமத்தம்பி தலைமை தாங்கினார்.

—0—

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 25-1-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர், நமது சைவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org